**CTCLSA வருமான நிதியம் (தொடக்கம் : 26 ஜூலை, 2021)**

**நிதிய முகாமையாளர்**

குகன் விநாயகசுந்தரம்

**நிதியத்தின் குறிக்கோளும் அளவுகோலும்**

CTCLSA வருமான நிதியத்தின் முதலீட்டுக் குறிக்கோள் ஒரு மிதமான மட்டத்திலான இடரைக் கொண்ட ஒரு நிலையான வருமானப் பிணையங்கள் முதலீட்டுத் தேக்கத்தில் முதலீடு செய்வதன் மூலம் ஒரு வருடாந்த வருமானத்தினை வழங்குவதாகும். நிதியத்தின் இடர் மற்றும் விளைவுத் தேவைப்பாடுகளைக் கருத்திற்கொண்டு அலகுடைமையாளர்களுக்கு ஒரு பொருத்தமான விளைவினை வழங்குவதற்கு நிதியமானது கம்பனிகளது கடன் பிணையங்கள் மற்றும் அரசாங்கப் பிணையங்களில் முதலீடு செய்யும்.

**கருத்துரை**

31 டிசம்பர் 2024 இல் நிறைவடைந்த காலத்திற்கு CTCLSA வருமான நிதியமானது அதன் முதலீட்டாளர்களுக்கு ஒரு வருடாந்த விளைவாக 14.66% இனை வழங்கியுள்ளது. நிதியமானது பிரதானமாக அரசாங்கப் பிணையங்களிலும் முதலீட்டுத் தரம் மற்றும் அதற்கு மேலான தரத்தையுடைய வழங்குனர்களது ஏனைய நிலையான வருமானக் கருவிகளிலும் முன்னிறுத்தம் செய்தது. நிதியத்தின் காலநீட்சி 0.32 வருடங்களாகக் காணப்படும்வேளை நிதியத்தின் 100% ஆன நிதிகள் BBB+ மற்றும் அதற்கு மேலான தரத்தையுடைய கருவிகளில் முதலீடு செய்யப்பட்டன.

**நிதியத்தின் கட்டணங்கள்**

முகாமைத்துவக் கட்டணம் – 0.3% p.a (தேறிய சொத்தின் பெறுமதியின் ஒரு % ஆக)

நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டணம் – 0.15% p.a (தேறிய சொத்தின் பெறுமதியின் ஒரு % ஆக)

காப்பகக் கட்டணம் – ரூ. 15,000 மாதாந்தம்

**காட்சிப்பொருள் 06 : நிதியத்தின் விளைவு எதிர் அளவுகோல் விளைவு**

| காலம் | GAIF | NDBIB-CRISIL 364 நாள் தி.உண்டியல் சுட்டி | GAIF- வருடாந்தம் |
|---|---|---|---|
| **2024 YTD** | **14.66%** | **13.61%** | **14.66%** |
| **ஆரம்பத்திலிருந்து** | **65.88%** | **52.80%** | **19.23%** |

**செயற்திறன்கள் 31 டிசம்பர் 2024 இல் உள்ளவாறான மாத இறுதி விலைகளின் அடிப்படையிலாகும். இந்த ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள செயற்திறன் தரவுகள் கடந்தகால செயற்திறனை பிரதிபலிப்பதுடன், இவை எதிர்கால விளைவுகளுக்கான உத்தரவாதமல்ல.*

மத்திய வங்கியானது 2024 ஆம் ஆண்டின்போது அதன் தளர்வான நாணயக் கொள்கை நிலைப்பாட்டினைப் பராமரித்தது. இதன் விளைவாக, மத்திய வங்கி வருடம் முழுவதும்


கொள்கை வட்டி வீதங்களை மொத்தமாக 200 அடிப்படை புள்ளிகளினால் குறைத்தது. மேலும், மத்திய வங்கியானது 27 நவம்பர் 2024 முதல் ஒரு தனி வட்டிவீத பொறிமுறைக்கு நகர்ந்து ஓரிரவு கொள்கை வட்டி வீதமாக 8%[4] இனை நிறுவியது.

2024 இல் நிதியத்தின் முதலீட்டு மூலோபாயமானது நிலவிய குறைவான வட்டி வீதச் சூழல் மற்றும் பொருளாதார நிச்சயமற்ற தன்மைகளினால் வடிவமைக்கப்பட்டது. வருடத்தின் முதலாம் அரையாண்டின்போது, நிதியமானது குறைவான காலத்தையுடைய அரசாங்கப் பிணையங்களில் மூலோபாயமாக முதலீடு செய்தது. இது எதிர்வரும் தேர்தல்களினால் சூழ்ந்துள்ள உறுதியின்மைகளினால் இயக்கப்படும் சாத்தியமான வட்டி வீத அதிகரிப்புகளிலிருந்து நலனடைவதற்கு நிதியத்தினை நிலைப்படுத்தியுள்ளவேளை நீண்டகால திறைசேரி முறிகளிலிருந்து மூலதன இலாபங்களை அடைவதற்கும் ஆகும்.


வருடத்தின் இரண்டாம் அரையாண்டின்போது நிதியமானது குறைவான வட்டி வீதங்களுக்கு மத்தியில் திடமான விளைவுகளை உறுதிசெய்வதற்காக நீண்டகால நிலையான வைப்புகளில் முன்னிறுத்தம் செய்தது. மேலும், வீழ்ச்சியடையும் வட்டி வீதங்களுக்கு மத்தியில் விளைவினை மேலும் மேம்படுத்துவதற்காக தெரிவுசெய்யப்பட்ட கம்பனிக் கடன் கருவிகளில் முதலீடுகளை மேற்கொண்டது. இதன் விளைவாக, CTCLSA வருமான நிதியமானது டிசம்பர் 2024 இன் இறுதியில் ஒரு வருடாந்த விளைவாக 14.66% இனை உருவாக்கியுள்ளது.

**நிதியத்தின் முக்கிய தரவுகள்**

**நிதியத்தின் கடன் தரம் - தே.சொ.பெ. இன் % ஆக**




**சொத்து ஒதுக்கீடு**




31 டிசம்பர் 2024 இல் உள்ளவாறான நிதியத்தின் தேறிய சொத்தின் பெறுமதியானது ரூ. 168.67 மில்லியன் என்பதுடன் நிதியமானது 61 அலகுடைமையாளர்களைக் கொண்டுள்ளது. 31 டிசம்பர் 2024 இல் உள்ளவாறான நிதியத்தின் அலகொன்றின் மீட்டெடுத்தல் விலையானது ரூ. 16.5876 ஆகும்.